# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2023

## வளர்தமிழ் 9

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ஆம் முறை | 2ஆம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 05 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 05 | | | |
| 9 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ஆம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. மன்னார் மாவட்டத்தில் தொல்குடித் தமிழரது ஈமப்பொருட்கள் கண்டெடுக்கப்பட்ட இடம்

அ) ஆனைக்கோட்டை ☐ ஆ) மாந்தை ☐

இ) பூநகரி ☐ ஈ ) ஆனையிறவு ☐

2. நடுநடுங்கி என்பது

அ) இரட்டைக்கிளவி ☐ ஆ) இணைமொழி ☐

இ) அடுக்குத்தொடர் ☐ ஈ ) அடுக்கிடுக்குத்தொடர் ☐

3. "நல்லாறு எனினும் கொளல் தீது..." இதில் நல்லாறு என்பது

அ) அறவழி ☐ ஆ) துன்பம் ☐

இ) இடர் ☐ ஈ ) தீங்கு ☐

4. இலங்கை அரசினது சிங்களம் மட்டும் என்ற அரசமொழிச் சட்டத்தை எதிர்த்துப் போராடியவர்

அ) விபுலாநந்தஅடிகள் ☐ ஆ) மறைமலைஅடிகள் ☐

இ) தாவீதுஅடிகள் ☐ ஈ ) தனிநாயகம்அடிகள் ☐

5. ஓரெழுத்துச் சொல்

அ) க ☐ ஆ) ப ☐

இ) ஆ ☐ ஈ ) சை ☐

6. சுற்றளவு என்பதைப் பிரித்தெழுதினால்

அ) சுற்ற + அளவு ☐ ஆ) சுற்று + அளவு ☐

இ) சுற்றி + அளவு ☐ ஈ ) சுற் + அளவு ☐

7. ஆனைக்கோட்டையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அகழ்வாய்வுகளை மேற்கொண்ட ஆண்டு

அ) 1979 ☐ ஆ) 1981 ☐

இ) 1980 ☐ ஈ) 1978 ☐

8. உரைத்தார் என்பதன் பகுதி

அ) த் ☐ ஆ) தார் ☐

இ) உரை ☐ ஈ) ஆர் ☐

9. 'அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகுத்திக் குறுகத் தரித்த குறள்' எனக் கூறியவர்

அ) கபிலர் ☐ ஆ) இடைக்காடர் ☐

இ) ஔவையார் ☐ ஈ) பரணர் ☐

10. நீங்கள் நன்றாகத் தேர்வை எழுதுங்கள். இச் சொல்லியம்

அ) தன்மைஒருமை ☐ ஆ) முன்னிலைப்பன்மை ☐

இ) படர்க்கைப்பன்மை ☐ ஈ) தன்மைப்பன்மை ☐

11. புறச்சுட்டுக்கு ஓர் எடுத்துக்காட்டு

அ) அவன் ☐ ஆ) இது ☐

இ) உது ☐ ஈ) அப்பையன் ☐

12. யாழ்ப்பாண அரையத்தை இறுதியாக ஆண்ட மன்னன்

அ) சங்கிலியன் ☐ ஆ) கயிலைவன்னியன் ☐

இ) எல்லாளன் ☐ ஈ) பண்டாரவன்னியன் ☐

13. மகாவம்ச காலத்திற்கு முன்னர் எழுதப்பட்ட நூல்

அ) இராவணகாவியம் ☐ ஆ) அழகின்சிரிப்பு ☐

இ) மணிமேகலை ☐ ஈ) ஆசியசோதி ☐

14. பேரின்னல் என்ற கருத்தை விளக்கும் இணைமொழித்தொடர்

அ) கண்ணுங்கருத்தும் ☐ ஆ) அல்லும்பகலும் ☐

இ) பேரும்புகழும் ☐ ஈ) கண்ணீருங்கம்பலையும் ☐

15. "நாராய் நாராய்" என்ற பாடலைச் செவியுற்ற மன்னன்

அ) பாண்டியமன்னன் ☐ ஆ) சோழமன்னன் ☐

இ) சேரமன்னன் ☐ ஈ) பல்லவமன்னன் ☐

16. பின்வருவனவற்றுள் போர்த்துக்கேய மொழிச்சொல்

அ) குசினி ☐ ஆ) கலண்டர் ☐

இ) யன்னல் ☐ ஈ) கச்சேரி ☐

17. போர்வீரர் தங்கும் இடம்

அ) வீடு ☐ ஆ) பள்ளி ☐

இ) பாசறை ☐ ஈ) கோவில் ☐

18. செலவு என்பதன் எதிர்ச்சொல்

அ) நட்டம் ☐ ஆ) தாழ்வு ☐

இ) அழிவு ☐ ஈ) வரவு ☐

19. பனையினது கிழங்கைப் பிளந்தது போல கூரிய அலகை உடைய பறவை

அ) வாத்து ☐ ஆ) நாரை ☐

இ) புறா ☐ ஈ) கிளி ☐

20. யானைக்கு இரண்டு மருப்புகள் உண்டு. இதில் உண்டு என்பது

அ) வியங்கோள்வினை ☐ ஆ) ஏவல்வினை ☐

இ) குறிப்புவினை ☐ ஈ) தெரிநிலைவினை ☐

21. பின்வருவனவற்றில் பெயர்ப்பகுசொல்

அ) மரம் ☐ ஆ) உண்டான் ☐

இ) மலை ☐ ஈ) வலைஞர் ☐

22. கலவோட்டையும் பொன்னையும் வேறுபாடின்றி ஒன்று போலவே கருதுபவர்

அ) அடியார் ☐ ஆ) செல்வர் ☐

இ) மன்னர் ☐ ஈ) அறிஞர் ☐

23. சங்கிலிமன்னன் வன்னியத்தேவனால் காட்டிக் கொடுக்கப்பட்டான். இதில் இடம்பெற்றுள்ள வேற்றுமை உருபு

அ) கு ☐ ஆ) இன் ☐

இ) ஆல் ☐ ஈ) இல் ☐

24. உலகின் முதல் மாந்தன் தோன்றிய இடம்

அ) தென்அமெரிக்காக்கண்டம் ☐ ஆ) குமரிக்கண்டம் ☐

இ) வடஅமெரிக்காக்கண்டம் ☐ ஈ) ஐரோப்பாக்கண்டம் ☐

25. இந்தியச் சிந்தனையும் அதன் வளர்ச்சியும் என்ற நூலை எழுதியவர்

அ) அல்பேர்ட்சுவைட்சர் ☐ ஆ) வீரமாமுனிவர் ☐
இ) பாவேந்தர் ☐ ஈ) பாரதியார் ☐

26. முல்லைச்சிரிப்பு என்ற உவமையணியின் உவமானம்

அ) அழகு ☐ ஆ) சிரிப்பு ☐
இ) முல்லை ☐ ஈ) போன்ற ☐

27. கயல்விழி காலையில் சுண்டல் உண்டாள். இச் சொல்லியத்தில் வந்துள்ள ஆகுபெயர்

அ) பொருளாகுபெயர் ☐ ஆ) தொழிலாகுபெயர் ☐
இ) சினையாகுபெயர் ☐ ஈ) இடவாகுபெயர் ☐

28. அன்பிலார் எல்லாந் தமக்குரியர் அன்புடையார்
என்பும் உரியர் பிறர்க்கு
இக் குறள் இடம்பெற்ற அதிகாரம்

அ) ஒழுக்கமுடைமை ☐ ஆ) அறிவுடைமை ☐
இ) அன்புடைமை ☐ ஈ) அடக்கமுடைமை ☐

29. ஔ என்ற எழுத்தின் இனவெழுத்து

அ) இ ☐ ஆ) எ ☐
இ) உ ☐ ஈ) ஈ ☐

30. ஆலயம் தொழுவது சாலச் சிறந்தது. இதில் சால என்பது

அ) உரிச்சொல் ☐ ஆ) பெயர்ச்சொல் ☐
இ) இடைச்சொல் ☐ ஈ) வினைச்சொல் ☐

புள்ளிகள் 30

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பசித்தோர்க்கு உணவளித்து மகிழ்தல் தமிழரின் உயர்ந்த பண்பாடு. ஐரோப்பியர் தமிழர் வாழ்ந்த நிலங்களைக் கைப்பற்றி ஏறத்தாழ ஐந்நூறு ஆண்டுகள் மேலாண்மை செய்து ஆண்டதால் தமிழருடைய வாழ்க்கை முறைகள் மாறின. பொருளாதாரம் வீழ்ந்தது; பண்பாடுகள் சரிந்தன; தொழில் முறைகளும் கல்வி முறைகளும் மாறின; அத்தோடு வாழ்க்கை முறைகளும் சிதறிப்போயின. இதனால் முன்னரைப் போல் ஒருவரை ஒருவர் தாங்கி நிற்க முடியாத நிலை உருவானது. இன்று மாந்தநேயமற்ற கொடூரச் செயல்களால் மக்கள் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து துயர வாழ்வை வாழ்கின்றனர். ஈழத்திலே சிலர் இன்றும் ஏதிலிகளாக வாழ்கின்றனர். இம்மக்களின் நிலை கண்டு புலம்பெயர் ஈழத்தமிழர்களின் விருந்தோம்பல் பண்பு மேலோங்கியுள்ளது. அதன் பயனாக அல்லும்பகலும் ஓய்வின்றி உழைக்கும் பணத்தை தாயகத்தில் பாதிக்கப்பட்ட உறவுகளுக்குக் கொடுத்து அவர்களின் பசியைப் போக்க உதவுகின்றனர். இதுவே புலம்பெயர் ஈழத்தமிழரின் விருந்தோம்பலின் மிக உச்சமான பண்பு ஆகும்.

1. ஐரோப்பியரின் வருகையினால் தமிழருடைய வாழ்க்கையில் ஏற்பட்ட மாற்றங்கள் இரண்டு தருக.

_______________________________________________

_______________________________________________

2. எச் செயல்களால் மக்கள் தங்களது வாழ்வாதாரங்களை இழந்து வாழ்கின்றனர்?

_______________________________________________

3. தமிழரின் உயர்ந்த பண்பாடு எது?

_______________________________________________

4. யாரின் வருகையினால் தமிழருடைய வாழ்க்கை முறைகள் மாறின?

_______________________________________________

5. புலம்பெயர் தமிழர் ஓய்வின்றி உழைக்கும் பணத்தை யாருக்குக் கொடுத்து உதவுகின்றனர்?

_______________________________________________

| புள்ளிகள் 10 |
|---|

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. ஆனைக்கோட்டையில் கிடைத்த 'கோவேத' என்ற தமிழ்ப்பிராமி எழுத்து எதனை உறுதிப்படுத்துகின்றது?

2. மன்னர் யாருடைய கையை எதிர்பார்த்து ஆட்சி செய்கின்றனர்?

3. சத்திமுற்றப்புலவர் ஏன் பாண்டிய மன்னனைக் காணச் சென்றார்?

4. "கோலுக்கே இந்தப் பயம் கொள்கிற பிள்ளாய் நீ - நாளை வேலுக்குப் போர்முனையில் என்ன பதில் சொல்வாய்" இக் கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

5. 'மீண்டும் தொடங்கும் மிடுக்கு' என்ற பாடலை எழுதியவர் யார்?

6. புதியதொருவீடு என்ற நாடகத்தில் வரும் பாடல்களில் யாருடைய வாழ்க்கை பற்றிக் கூறப்பட்டுள்ளது?

7. திருக்குறள் குறித்துப் பண்டைப் புலவர்கள் புகழ்ந்து போற்றிய புகழ்மாலை எது?

புள்ளிகள் 10

**8) தரப்பட்டுள்ள பழமொழிகளுக்குப் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்து எழுதுக.**

* ஒரு செயலில் இரு கன்னை.
* உயர்ந்த நட்பு.
* வஞ்சகப் பேச்சு.
* தாய்மையின் கவனம்.
* விடாப்பிடியாய் நிற்றல்.

1. அடி நாக்கில் நஞ்சும் நுனி நாக்கில் அமிழ்தமும்.

_______________________________________________

2. தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்.

_______________________________________________

3. ஒரு கை தட்டினால் ஓசை உண்டாகுமா?

_______________________________________________

4. கோழி மிதித்து குஞ்சு சாகுமா?

_______________________________________________

5. அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்.

_______________________________________________

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 150 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- சாகாவாழ்வு பெற்ற சங்கிலி மன்னன்
- தாயின் தாலாட்டு
- பொழுதுபோக்குகளும் அவற்றின் பயன்களும்
- வறுமையின் கொடுமை

புள்ளிகள் 15